இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (நாடகமும் அரங்கியலும் மற்றும் இயற்கை விஞ்ஞானம்)- 2023/2024

இறுதிப்பரீட்சை மட்டம் - 06

**STU6313–சிறுவர் உரிமைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 19.12.2024 | நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் அத்துடன் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. ஐக்கிய நாடுகள் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர் உரிமைகளது **நான்கு** (04) பிரிவுகளைக் குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விளக்குக.

2. பாகுபாடின்மைக் கோட்பாடு (Principle of Non – Discrimination) எனும் பதத்தினை விளக்குக.

3. ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் மாநாட்டினை ஏற்ற பின்பு இலங்கை அரசாங்கத்தால் சிறுவர் உரிமைகளை நிலைநாட்டும் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் **ஐந்தினைப் (05)** பட்டியலிடுக.

4. சிறுவர் துஸ்பிரயோகங்கள் இடம்பெறுகின்ற **ஐந்து** (05) வழிவகைகளைக் குறிப்பிட்டு, அவற்றைத் தடுப்பதற்கான **மூன்று** (03) ஆலோசனைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

5. தத்தெடுத்தல் (Adoption) என்பதனால் கருதப்படுவது யாது? அதற்கு தகுதி பெறுவதற்கான **மூன்று** (03) அளவுகோல்களைக் குறிப்பிடுக.

6. பாடசாலை இடைவேளையின் போது சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஆசிரியர்களினால் முன்னெடுக்கப்படும் **மூன்று** (03) செயற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

7. இலங்கையில் காலனித்துவ ஆட்சிக்கு முன்பு சிறுவர் உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டைச் சுருக்கமாக ஆராய்க.

8. ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் உரிமைகள் மகாநாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பங்குபற்றல் உரிமையை உறுதிப்படுத்துவதில் நாடகமும் அரங்கியலும் / இயற்கை விஞ்ஞான ஆசிரியராக நீர் மேற்கொள்ளும் **ஐந்து** (05) நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. i. பிள்ளையின் மேம்பட்ட நலன் (Best interest of the child) என்பதனால் கருதப்படுவது யாது?

**(03 புள்ளிகள்)**

ii. சிறுவர் துஸ்பிரயாகம் இடம்பெற்றுள்ளது என சந்தேகிக்கப்படுகின்ற சூழலில் ஆசிரியர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை விவரிக்குக.

**(07 புள்ளிகள்)**

iii. சிறுவர் துஸ்பிரயோகங்களைக் குறைப்பதற்கு சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த சமூக ஊடகங்களை எவ்வாறு ஆக்கபூர்வமாக பயன்படுத்த முடியும் என்பதனை விளக்குக.
**(10 புள்ளிகள்)**

**10. i.** விசேட சூழ்நிலைகளுக்குட்படுத்தப்பட்ட சிறுவர்கள் எனும் பதத்தினை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.
**(03 புள்ளிகள்)**

**ii.** அவர்களது கல்விக்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய குறைந்தது **மூன்று (03)** நடவடிக்கைகளை முன்வைக்குக.
**(07 புள்ளிகள்)**

**iii.** முன்வைக்கப்பட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படுகின்ற தடைகளை வெற்றி கொள்வதற்கு எவ்வகையான உத்திகளை நீங்கள் பயன்படுத்துவீர்கள்.
**(10 புள்ளிகள்)**

**11. i.** ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் உரிமைகள் தொடர்பான மாநாட்டில் குறிப்பிட்டதற்கிணங்க பங்குபற்றல் உரிமை என்பதனால் கருதப்படுவது யாது?
**(03 புள்ளிகள்)**

**ii.** "பங்குபற்றல் உரிமை சிறுவர்களின் தகவல் உரிமையை உறுதிப்படுத்துகின்றது" ஆசிரியர்கள் சிறுவர் தவறாக வழிநடத்துகின்ற மற்றும் துன்பம் விளைவிக்கின்ற செயற்பாடுகளிலிருந்து பாதுகாக்கவும் அத்துடன் சரியான மற்றும் பொருத்தமான விடயங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களை வழிநடத்துவதற்குமான **மூன்று (03)** வழிவகைகளை முன்வைக்குக.
**(07 புள்ளிகள்)**

**iii.** சிறுவர் உரிமைகள் தொடர்பான ஓர் நாடக தயாரிப்பில் நீர் ஈடுபட்டுள்ளீர் எனக் கொண்டு சிறுவர்களது பங்குபற்றல் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான நாடக உருவாக்கத்தை எவ்வாறு நாடக கட்டமைப்பில் ஏற்படுத்துவீர் என்பதைச் சுருக்கமாக எழுதுக. (உமது விடை தத்துருபமான சூழலையும் நாடக பாத்திரங்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்).
**(10 புள்ளிகள்)**

**12. i.** பெற்றோர் பாணிகள் (Parenting Styles) **மூன்றினைக் (03)** குறிப்பிடுக
**(03 புள்ளிகள்)**

**ii.** நீர் மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு பெற்றோர் பாணியும் சிறுவர்களின் நடத்தை மற்றும் சமூக விருத்தியில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை ஆராய்க.
**(07 புள்ளிகள்)**

**iii.** பெற்றோர்களுடனான சந்திப்பில் அவர்கள் செய்யக்கூடியவை மற்றும் செய்யக் கூடாதவை எவை? என்பதனைச் சிறுவர்களிடத்தில் முழுவிருத்தியை ஏற்படுத்த பெற்றோருக்கு கற்பிப்பீர் என்பதனை **மூன்று (03)** விடயங்களினூடாக விளக்குக.
**(10 புள்ளிகள்)**

**13. i.** "கடுமையான மற்றும் உடல் ரீதியாள தண்டனை சிறுவர்களின் உரிமைகளைப் பாதிப்பதோடு நீண்ட உடல்ரீதியான மற்றும் மனவெழுச்சி ரீதியான சேதத்தினையும் ஏற்படுத்துகின்றது." இக்கூற்றினைப் பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.
**(10 புள்ளிகள்)**

**ii.** சிறுவர்களின் உரிமைகள் அல்லது மனவெழுச்சிசார் நிலைமைக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் சிறுவர்களது தவறான நடத்தைகளை முன்வைக்க மேற்கொள்ளப்படும் குறைந்தது **ஐந்து (05)** ஒழுக்க நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

மேற்கூறப்பட்ட நடவடிக்கை முறைகள் எவ்வாறு சிறுவர்களது ஆளுமை விருத்திக்கு உடன்பாடான முறையில் பங்களிப்பு செய்யும் என்பதனை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

14. **i.** வளர்ச்சி (Growth) மற்றும் விருத்தி (Development) ஆகிய பதங்களை வரைவிலக்கணம் செய்க.

**(04 புள்ளிகள்)**

**ii.** சிறுவர்களின் வளர்ச்சி மற்றும் விருத்தியை உறுதிப்படுத்துவதற்கு ஆசிரியர்கள் என்ன செய்ய முடியும் என்பதனைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்துகையில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் **மூன்று (03)** சவால்களைக் குறிப்பிட்டு, அவற்றை வெற்றி கொள்வதற்கான வழிமுறைகளை முன்வைக்குக.

**(10 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*